**Judicial Form No.53**
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
**(Chapter XXII, Cr.P.C.)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 59 of 2020

Depositions of PW - 3 witness for ________ { Prosecution / Defence / Court

| | |
|---|---|
| Name | : முத்துச்சாமி |
| Father's Name | : த/பெ. அங்கமுத்து |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of February** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி தானே குறுக்கு விசாரணை செய்வதாக கூறிவிட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

முதல்விசாரணை

1. நான் தற்போது பாப்பம்பட்டி பிரிவு, செல்வராஜபுரத்தில் வசித்து ஒர்க் சாப் வைத்துள்ளேன்.

2. கடந்த 06.11.2019ம் தேதியன்று காலை 8 மணியளவில் நான் என்னுடைய வீட்டிலிருந்து கிளம்பி என்னுடைய ஒர்க் சாப்பிற்கு வந்தபோது செந்தில்குமார் வீட்டிற்கு முன்னர் கூட்டமாக இருந்தது. என்னவென்று விசாரிக்க சென்றபோது சில்வர் கலர் மாருதி ஆம்னி கார் பதிவெண் 1073யை காணவில்லை என்று கூறினார். தேடி பார்த்தும் கிடைக்காததால் காவல் துறையில் புகார் அளிப்பதாக கூறினார். அதன்பின்னர் நான்

வேலையில் இருப்பதாக கூறி ஒர்க் சாப்பிற்கு சென்று விட்டேன். அவர் புகார் அளிக்க சென்றார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. அண்ணாமலை எங்களுடைய வீட்டின் அருகில் வசிப்பதால் அவரை எனக்கு தெரியும். அருகில் வசிப்பதால் சிறு வயது முதலே அவரை எனக்கு தெரியும். வண்டி காணாமல் போனதாக செந்தில்குமார் கூறினார். அவர் கூறியதன் பேரில் தான் வண்டி காணமால் போன விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வண்டியை முதல் நாள் இரவு அவர் வண்டியை நிறுத்தியதை பார்த்தீர்களா என்றால் நான் பார்த்தேன். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அண்ணமாலை மற்றும் செந்தில்குமார் கூறியதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.02.08 17:11:45 -1000

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 59 of 2020

Depositions of PW - 4 witness for ________ Prosecution / Defence / Court

Name : மகேஷ்குமார்
Father's Name : த/பெ. சண்முகம்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th **day of February** 2024.

**(அரசு வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிரி தானே குறுக்கு விசாரணை செய்வதாக கூறிவிட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது பாப்பம்பட்டி பிரிவில் வசித்து இருசக்கர வாகனம் பழுது பார்க்கும் ஒர்க் சாப் வைத்துள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பார்வைமகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையதாகும்.

2. கடந்த 12.11.2019 ம் தேதியன்று மதியம் 3 மணியளவில் நான் செந்தில்குமார் வீட்டு வழியாக சென்றபோது அவருடைய வீட்டிற்கு முன்னால் காவலர்கள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் என்னவென்று சென்று பார்த்தேன். வண்டி திருடுபோனது சம்மந்தமாக படம் வரைய வந்திருப்பதாக கூறினார்கள். அங்கு வந்த போலீசார் விசாரித்து

விட்டு படம் வரைந்தாக்ரள். அதற்கு சாட்சியாக நானும் சுந்தரராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **(பார்வைமகசர் அ.சா.ஆ.4 ஆ ககுறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

G RUBANA Digitally signed by G RUBANA Date: 2024.02.08 17:11:53 -1000

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**